செ.வெ. எண்: 243 நாள்: 31–03–2012

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 27.3.2012 அன்று தலைமைச் செயலகத்தில், விவசாயப் பெருமக்களுக்கு தேவையான அனைத்து விவரங்களும் தொகுக்கப்பட்டு, விவசாயிகள் பயன்பெறும் வகையில் வேளாண்மைத் துறையால் தயாரிக்கப்பட்ட விவசாய கையேடுகளை வெளியிட்டார்கள்.

விவசாயிகளின் நலன்களில் மிகுந்த அக்கறை உள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழக வேளாண் உற்பத்தித் திறனில் உள்ள இடைவெளியை உரிய பண்ணை அணுகுமுறை மூலம் குறைத்து உணவுப்பயிர்கள் உற்பத்தியை பெருக்குவதற்கும், வேளாண் விளைபொருட்களின் அறுவடைக்கு பிந்தய பதப்படுத்தும் கட்டமைப்புகளை மேம்படுத்தி, சந்தை இணைப்பை ஏற்படுத்துவதன் மூலம் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கச்செய்து அவர்களின் வருமானத்தை பல மடங்காக உயர்த்தி, தமிழகத்தில் இரண்டாம் பசுமைப்புரட்சியை ஏற்படுத்த பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள்.

மேலும், வேளாண் சாகுபடி முறைகள் சார்ந்த பல்வேறு முன்னோடி தொழில்நுட்பங்களையும், அரசு செயல்படுத்திவரும் பல்வேறு நலத்திட்டங்களையும், இதர வேளாண் தகவல்களையும், விவசாயிகள் எளிதில் அறிந்துகொள்ளும் வண்ணம், விவசாயிகளுக்கு வழிகாட்டும் கையேடு வேளாண்துறையில் உள்ள அனைத்து துறைகள் மூலம் மாநில மற்றும் மாவட்ட அளவில் தொகுக்கப்பட்டுள்ளன. மாநில அளவிலான கையேடு, துறை அலுவலர்கள் உபயோகத்திற்கும் அந்தந்த மாவட்டத்திற்கு உகந்த வேளாண் தகவல்கள் அடங்கிய மாவட்ட அளவிலான கையேடு, விவசாயிகளின் பயன்பாட்டிற்கு வழங்கவும் தயாரிக்கப்பட்டுள்ளன. இக்கையேடு, மண்வகைகளுக்கேற்ற பயிர்சாகுபடிமுறை, நீர், பூச்சி, நோய் மேலாண்மை, மேம்படுத்தப்பட்ட இரகங்கள், தொழில்நுட்பங்கள், விவசாயிகளின் வெற்றிக்கதைகள், வேளாண் விரிவாக்க அலுவலர்கள், ஆராய்ச்சி நிலையங்கள், இடுபொருள் விநியோகிப்பவர்கள், பண்ணை இயந்திரங்கள் விநியோகிப்பாளர்கள், சந்தைப்படுத்துவோர் ஆகியோரின் தொடர்பு விவரங்கள், பயிர்க்காப்பீட்டுத் திட்டம் மற்றும் திட்டநலன்கள் போன்ற விவசாயிகளுக்குத்

தேவையான அனைத்து விவரங்களையும் எளிதில் அறிந்துகொள்ளும் வண்ணம் தொகுக்கப்பட்டுள்ளன.

ஆராய்ச்சிக் கூடம் மற்றும் வயல்வெளிக்கு இடையேயுள்ள தொழில்நுட்ப அறிவு இடைவெளியை குறைக்கவும், வேளாண் விரிவாக்கத்தினை வலுப்படுத்தி விவசாயப்பெருங்குடி மக்கள் புதிய தொழில்நுட்பங்களையும் அரசின் பல்வேறு திட்டங்களையும் எளிதில் பெற வழிவகை செய்ய 1) நெல், சிறுதானியங்கள் மற்றும் பயறு வகைகள் ஆகிய உணவு தானியப் பயிர்கள், 2) கரும்பு, பருத்தி மற்றும் எண்ணெய் வித்துக்கள் ஆகிய வணிகப் பயிர்கள், 3) தோட்டக்கலைப் பயிர்கள்- வருடாந்திரப் பயிர்கள், 4) தோட்டக்கலைப் பயிர்கள் - பல்லாண்டுப் பயிர்கள், 5) மண், நீர்வளப் பாதுகாப்பு மற்றும் இயந்திரமயமாக்கல் குறித்த வேளாண் பொறியியல் பணிகள், 6) வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை திட்டங்கள் மற்றும் சேவைகள், 7) தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக வேளாண் கல்வி, ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்த விவரங்கள் மற்றும் 8) தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் நீர்வடிப்பகுதித் திட்டங்கள் குறித்த விவரங்கள் அடங்கிய எட்டு வகையான கையேடுகளை 27.3.2012 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வெளியிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விவசாய கையேடுகளை வெளியிட்டு, உழவர் பெருமக்கள் அனைவரும் இக்கையேடுகளை பயன்படுத்தி, அதன் முழுமையான விவரங்களை அறிந்து பயன்பெற்றிடவும், தமிழகத்தில் இரண்டாம் பசுமைப்புரட்சியை ஏற்படுத்தி முழுவெற்றி பெறவும் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், வேளாண்மைத் துறைச் செயலாளர், வேளாண்மைத்துறை ஆணையர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
நாள்: 31.3.2012